2003 நவம்பர் 6]

நிலையம் எந்த இடத்திலே, ஒரு uninterrupted quality power supply—ஒரு தடையில்லா தரமான மின் வசதியைப் பெற வேண்டும் என்கின்ற ஒரு நிலையில் strengthen செய்ய வேண்டும்; improve செய்ய வேண்டும் என்கின்ற ஒரு நோக்கத்தோடுதான் அந்த இடத்திலே அமைக்கப்படுகின்றது. எனவே எந்த இடத்திலே அந்தப் பிரச்சினை இருக்கிறதோ அந்த இடத்திலே அமைக்கப்பட வேண்டுமென்றால் அந்த இடத்திலே நிலம் வேண்டும். நிலம் சில நேரத்திலே தனியாருக்குச் சொந்தமானதாக இருக்கும். அரசாங்கத்திற்கு சொந்தமானதாகவும் இருக்கும். அரசாங்கத்திற்கு சொந்தமாக இருக்கின்ற பட்சத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அதை acquire செய்யலாம். தனியாருக்குச் சொந்தமான நிலமாக இருக்கும் பட்சத்திலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கொஞ்சம் extension work செய்து மின் வாரியத்திற்கு உதவி செய்தால் அதுவும் உதவிகரமாக இருக்கும் என்ற தகவலைச் சொல்லிக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 67, திரு. எஸ்.ஏ.எம். உசேன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

67—

திருமண மண்டபம்

***19044—திரு. எஸ்.ஏ.எம். உசேன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள பார்த்தசாரதி திருக்கோயில் சார்பில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) ஆம்.

(ஆ) சென்னை, திருவல்லிக்கேணி தொகுதியிலுள்ள அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான, திருவல்லிக்கேணி

பெரிய தெரு, கதவு எண் 103-ல் உள்ள 5,512 சதுர அடி நிலத்தில் திருமண மண்டபம் கட்டுவது குறித்து அறநிலையத் துறையின் பரிசீலனையில் உள்ளது என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான திருவல்லிக்கேணி தொகுதியில் அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி திருக்கோயிலுக்கு உட்பட்ட நிலத்தில் திருமண மண்டபம் கட்ட வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். செயற்குறிப்பில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அது இந்த நிதி ஆண்டில் கட்டப்படுமா? எந்தத் திட்ட மதிப்பீட்டில் அது கட்டப்படும் என்ற விவரத்தையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலமான, திருவல்லிக்கேணி, பெரிய தெரு, கதவு எண் 103-ல், 5,512 சதுர அடி நிலத்தில் கடந்த பல ஆண்டுகளாக ஒரு தபால் நிலையம் இயங்கி வந்தது. அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால் தபால் நிலையம் 30-9-2002 அன்று காலி செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் 300 சதுர அடியில் மின்சார டிரான்ஸ்ஃபார்மர் ஒன்றும் உள்ளது. இதனை வேறு இடத்திற்கு மாற்றியமைத்து அங்கு திருமண மண்டபம் கட்ட பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவில் உபயதாரரைக் கொண்டு திருமண மண்டபம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டது, இந்த ஆண்டில் அது நிறைவேற்றப்படுமா என்றுதான் கேட்டேன். அதற்கு நிதி தேவை என்றால் என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தரத் தயாராக இருக்கின்றேன், என் தொகுதி மக்களுடைய நலன் கருதி. எனவே உடனடியாக அதற்கான அனுமதியை வழங்கி மாநகராட்சியிடம் அந்த இடத்தை ஒப்படைத்தால், மாநகராட்சிக்கு நிதி ஒதுக்கித்தர நான் தயாராக இருக்கின்றேன். மிக விரைவிலே, அவர்களுக்கு அது பயன் அளிக்கக்கூடிய வகையில், நீண்டகாலக் கோரிக்கையான எனது தொகுதி மக்களுடைய இந்தக் கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய வகையில் அதற்கு உதவி புரிய வேண்டுமென்றும், அதற்கான நிதி எவ்வளவு என்றாலும் அதை நான்

2003 நவம்பர் 6]

தரத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து கட்டுவதற்கு, விதியில் இடம் இருந்தால், அந்த நிதியைக் கொடுப்பதற்கு முன் வருவார்களேயானால், இந்த ஆண்டே கட்டுவதற்கு அறநிலையத் துறையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு திரு. பார்த்தசாரதி திருக்கோயிலுக்குச் சொந்தமான 10-க்கும் மேற்பட்ட ஏக்கர்களைக் கொண்ட நிலங்கள் அண்டை மாநிலமான ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருப்பதாகவும், அதில் மிகக் குறைந்த அளவுக்கே அந்த நிலங்களுக்குண்டான குத்தகைப் பணம் வசூலிக்கப்படுவதாகவும், பல ஆண்டுகாலமாக அதற்கான குத்தகைப் பணம் செலுத்த வேண்டியவர்கள் செலுத்தாமல் இருப்பதாகவும் ஒரு நிலை இருக்கிறது. ஆகவே இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கையை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலுக்குச் சொந்தமாக ஆந்திரா மாநிலத்தில் 3.8 ஏக்கர் நஞ்சை நிலமும் 5.56 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளது. நஞ்சை நிலத்தில் நெல் பயிரிடப்பட்டு அதன்மூலம வருடக் குத்தகை 2,500 ரூபாய் மட்டுமே பெறப்படுகிறது. புஞ்சை நிலத்தில் சவுக்கு பயிரிடப்படுகிறது. 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏலம் விடப்படுகிறது. புதிய விதிகளின் அடிப்படையில் இப்போது உரிய குத்தகையை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 68, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.